**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>**

**<u>அ.வ.எண். 313/2006</u>**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025 – ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **31.10.2025** |
| **பெயர்** | **சுரேஷ்பாபு** |
| **த/பெ** | **இராதாகிருஷ்ணநாயுடு** |
| **சாட்சி** | **DW2** |

**விசாரணை தொடங்கும் நேரம்–** 12.36.**p.m**

**<u>குறுக்கு விசாரணை–</u>**

1. நான் இந்த வழக்கின் 6–ம் பிரதிவாதியாவேன். முதலாம் பிரதிவாதியான இராதாகிருஷ்ணநாயுடு எனது தந்தை. 2–ம் பிரதிவாதியான ரத்தினவள்ளியம்மாள் எனது தாயார் ஆவார். 3ம் பிரதிவாதிக்கு தான் நான் வழக்கு சொத்தை விற்பனை செய்துள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது தாயார் இறந்த பிறகு தான் பிரமாணவாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றும் நான் அதை படித்துப்பார்த்து தான் கையொப்பம் இட்டேன் என்றால் சரிதான். அதில் உள்ள விவரம் எனக்கு தெரியும்.

2. நான்காம் பிரதிவாதியான சத்தியக்குமார் என் சகோதரியின் மகன் ஆவார். 5–ம் பிரதிவாதியான பிரேம்குமாரும் என் சகோதரி விஜயலட்சுமியின் மகன். நான் 1 மற்றும் 2ம் பிரதிவாதிகளின் மகன். 7ம் பிரதிவாதியான மல்லிகா என் சகோதரி, 8ம் பிரதிவாதியான ராஜேஷ்பாபு என் சகோதரர். நானும், பிரதிவாதிகளும் ஒரே குடும்பமாக தான் உள்ளோம் என்றால் சரிதான். எனது பிரமாணவாக்குமூலத்தில் 14–ம் பத்தியில் 3–ம் வரியில் என் பெற்றோர்கள் அதாவது 1 மற்றும் 2–ம் பிரதிவாதிகளால் 3–ம் பிரதிவாதிக்கு எழுதி அளித்த கிரையப்பத்திரம் செல்லுபடி ஆனதே தவிர அதில் எந்த மோசடியும் நடக்கவில்லை மேலும் வழக்கு தாக்கல் செய்யும் காலத்தில் 2006 – ல் 3–ம் பிரதிவாதியின் ஸ்வாதீனத்திலே இருந்து

வருகிறது என்று குறிப்பிட்டுள்ளபோது என் தாயார் கூறிதான் எனக்கு தெரியும் என குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

3. என் தந்தை சாட்சியம் அளித்த போது விற்பனை செய்த கிரையப் பத்திரத்தை தன்னுடைய கையொப்பத்தை ஒப்புக்கொண்டார் என்றால் நான் நீதிமன்றத்திற்கு வெளியில் இருந்தேன். 28.08.2025 தேதியிட்ட குறுக்கு விசாரணையில் பத்தி 3–ல் என் தந்தை அவர் கையெழுத்தை ஒப்புக்கொண்டுள்ளார் என்றால் அது குறித்து தெரியாது. என் தந்தை நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இருக்கிறாரா என்றால் நன்றாக பேசும் நிலையில் இருக்கிறார். என் தந்தை அவரின் சாட்சியத்தில் 3ம் பிரதிவாதயிடம்இருந்து ரூ. 4 லட்சம் கிரையத் தொகையாக பெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

4. என் தந்தை அவர் சாட்சியத்தில் உண்மை கூறினாரா அல்லது பொய் கூறினாரா என்று எனக்கு தெரியாது. என் தந்தை பொதுவாக உண்மை தான் பேசுவார் என்றால் சரிதான். தாவா சொத்து சாந்தகுமாரி அவர்களுக்கு சொந்தமான சொத்து என்றால் சரிதான். என் பிரமான வாக்குமூலத்திடில் பத்தி 8 ல் வாதியை 27.01.1993 ல் என் தாயார் ரத்தினவள்ளி அவர்களுக்கு கிரையம் கொடுத்துவிட முடிவு செய்து முதலாவது ரூ. 50000 முன்தொகை கொடுத்து பின் முழு கிரையத் தொகை செலுத்தி என் பெற்றோர்கள் ஸ்வாதீனத்தில் இருந்தபோது வாதி உரிய கிரைய ஆவணம் எழுத தவறினால் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான்.

5. மேற்கூறிய கிரைய ஒப்பந்தத்தை அடுத்து கிரைய பத்திரம எதுவும் ஏற்படுத்தவில்லை என்றால் சரிதான். அதற்கான முயற்சியாக வழக்கறிஞர் அறிவிப்பும் அனுப்பினார்களா என்றால் சரிதான். பி.சா.ஆ 1 மற்றும் பி.சா.ஆ 2– 27.01.1993 தேதியிட்ட ஒரு ஒப்பந்த ஆவணங்கள் என்றால் சரிதான். பி.சா.ஆ 1 மற்றும் 2 ல் கிரைய ஒப்பந்த மீதி பாக்கி தொகையாக ரூ. 1,49,908 என்றால் சரிதான். 27.01.1994–ற்குள் கால கெடு கொடுக்கப்பட்டு கிரையப்பத்திரம் ஏற்படுத்த வேண்டும் என்று உள்ளது என்றால் அதற்குள் வனரோஜம்மாள் என்பவர் சாந்தகுமாரி, இரத்தினவள்ளி மற்றும் எனது தந்தை இராதாகிருஷ்ணன் மீது எதிர்த்து வழக்கு தொடுத்து நிலுவையில் இருந்ததால் கிரையப் பத்திரம் பதிவு செய்யாமல் இருந்தது.

6. மேற்கூறிய அசல் வழக்கு எண் 348/1993–ன் பிராது பி.சா.ஆ–3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கு வா.சா.ஆ–10 ஆவணத்தின் மூலம் 18.02.1994 ல் வாபஸ் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த கிரைய ஒப்பந்தம் அடிப்படையில் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். குத்தகைக்கு முச்சிலிக்கா எழுதி கொடுத்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டி இ. ம.மனு எண் 237/2011 எங்கள் தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தால்

தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அது குறித்து தெரியாது. எனத பெற்றோர்கள் அதனை எதிர்த்து CRP(PD)No. 2642/2011 சீராய்வு சென்றனர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்கூறிய முச்சிலிக்கா நீதிமன்றத்தில் தாக்கல் செய்து குறியீடு செய்யவில்லை என்றால் தெரியாது.

7. மேற்சொன்ன வழக்கின் தீர்ப்பு வா.சா.ஆ 11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கூறிய ஆவணங்கள் இதே நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு விசாரணை செய்த காரணத்தினால் அது குறித்த விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான், தெரியும்.

**(மேலும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**
**விசாரணை முடியும் நேரம். 01.12.p.m.**